வகையில், ரூ.2 கோடி நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**5—**

### அங்கன்வாடி மையக் கட்டடம்

***14351—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நெசல் மற்றும் தென்றல் நகர் பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றிம் நெசல் ஊராட்சியில், நெசல் நகர் மற்றும் தென்றல் நகர் என இரண்டு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நெசல் நகர் அங்கன்வாடி மையம் 1982 முதல் நெசல் நகர் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் அரசுக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இம்மையத்தின் கட்டடத்தில் மேற்கூரை, தரை, ஜன்னல், கதவு, சுவர் விரிசல்*

போன்ற பெரிய பழுதுகள் ஏற்பட்டன. அந்தப் பெரிய பழுதுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஊரக வளர்ச்சித் துறைமூலம் சரி செய்யப்பட்டு, தற்போது அங்கன்வாடி மையம் புதுப்பொலிவுடன் இயங்கி வருகிறது.

*முற்பகல் 10-30*

தென்றல் நகர் குறு அங்கன்வாடி மையம் 2007 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்குக் கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன், கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 50 குழந்தைகளுக்குமேல் சென்றுவரக்கூடிய ஓர் அங்கன்வாடி மையம் அது. அதிலே மாவட்ட நிருவாகத்துடன் கலந்து இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியை விரைவுபடுத்தி, ஆதி திராவிடர்கள் வசிக்கக்கூடிய அந்தப் பகுதியிலே விரைவாக ஓர் அங்கன்வாடி மையத்தைக் கட்டித் தர வேண்டும். ஆரணி தொகுதியிலே அழகுசேணை, கொளத்தூர், ரெட்டிப்பாளையம், மோட்டூர், நடுப்பட்டு, ஏரிக்குப்பம், லாடப்பாடி, கள்ளேரிப்பட்டு, சிவசக்தி நகர், முணுக்கப்பட்டு, மேல்புத்தூர், மேல்மட்டை விண்ணமங்கலம் ஆதி திராவிடர் காலனி, மேல்நகரம்பேடு ஆதி திராவிடர் காலனி, வெங்கடேசன்பட்டி போன்ற பகுதிகளிலும் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் காலங்களில் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியிலே இருக்கிற மொத்த அங்கன்வாடி மையங்களையும் பெயரிட்டு மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்துவிட்டார். இருந்தாலும், மாவட்ட நிருவாகத்துடன் கலந்து பேசி, எந்தெந்த இடங்களில் அவசியத் தேவை ஏற்படுகிறதோ, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக, அதை அந்த இடத்தில் கட்டித் தருவதற்குரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய வழிகாட்டுதலின்படி, ஒரு வருடத்திற்கு மூன்று அங்கன்வாடி மையங்கள்தான் கட்ட முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், என்னுடைய தொகுதியிலே குறைந்தபட்சத் தேவையாக ஏறத்தாழ 18 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், அரசு வழங்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியை 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தருகின்றபட்சத்திலே, நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டி முடிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நான் குறிப்பிட்ட பகுதிகளுக்கு, துரிதகால நடவடிக்கையாக, குறைந்தபட்சம் ஆதிதிராவிடர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளுக்காவது போர்க்கால அடிப்படையிலே அங்கன்வாடி மையங்களைக் கட்டித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டையே ஆண்டு கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசே 6 தொகுதிகளுக்கும் சேர்த்து 5 கோடி ரூபாய் தருகின்றபோது, (குறுக்கீடு) ரூ.5 கோடிதான், 6 கோடி ரூபாய் என்கிறார் அவர். நீங்கள் ஏன் தவறாகச்

சொல்லிக் கொடுக்கிறீர்கள்? எப்போதுமே தவறாகவே பேசுவது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பழக்கம். ஆகவே, இந்த முறையும் திசை திருப்புவதற்கு, நாங்கள் சரியான பதிலை சொல்லும்போது, நீங்கள் அதை திசை திருப்பப் பார்க்கிறீர்கள். (குறுக்கீடு) தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு ஒரு தொகுதிக்கு 2 கோடி ரூபாய் என்று வழங்கிக் கொண்டிருப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய பெருந்தன்மையான எண்ணத்தோடு சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்புரிமையைத் தெரிந்துகொண்டு, பணி செய்ய வேண்டுமென்பதற்காக வழங்கிக் கொண்டிருக்கிற நிதி! இந்தக் குழந்தைகளின் கல்வி என்பது மிக, மிக முக்கியம். அந்த முக்கியத்துவத்தைக் கருதி, உங்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிற அத்தனை ஊர்களுக்கும் நீங்கள் கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தங்களுடைய நிதியைத் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## ஆவணங்களைப் பாதுகாத்தல்

***31788—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஆவணக் காப்பகங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,